2018 ஜூன் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

நடை மேம்பாலம்

***545—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, நேரு நகர் மற்றும் வள்ளியம்மை நகர் பகுதிகளை 100 அடி சாலையுடன் இணைக்க நடை மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கம் தொகுதி, நேரு நகர், வள்ளியம்மை நகர் பகுதிகளை 100 அடி சாலையுடன் இணைக்க நடை மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை. வில்லிவாக்கம் தொகுதியிலுள்ள நேரு நகர், வள்ளியம்மை நகர் பகுதிகள் 100 அடி சாலையைவிட பள்ளமான பகுதிகளாகும். மேலும், அப்பகுதிகளையொட்டி பயன்பாட்டில் இல்லாத இரயில்வே இருப்புப் பாதை உள்ளது. நேரு நகர், வள்ளியம்மை நகர் பகுதி மக்கள் தற்போது சிட்கோ நகர் பிரதான சாலையைப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்பகுதி மக்கள் தற்போது பயன்பாட்டில் இல்லாத இருப்புப் பாதையைக் கடந்து செல்ல ஏதுவாக இப்பகுதிகளை 100 அடி சாலையுடன் இணைத்து நடை மேம்பாலம் அமைக்கும் பணியானது இரயில்வே துறையால்தான் செய்யப்பட வேண்டும். இப்பகுதியில் நடை மேம்பாலம் அமைப்பது தொடர்பாக இரயில்வே துறையின் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட காளப்பட்டி, விளாங்குறிச்சி, சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி மற்றும் துடியலூர் ஆகிய பகுதிகளுக்குக் கிட்டத்தட்ட 605 கிலோ மீட்டர் அளவிற்கு பைப் லைனை விரிவுபடுத்துவதற்கும், 26 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கும் ரூ.189 கோடி ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த நிதியைப் பெற்றுத் தந்து, திட்டத்தைத் தொடங்கி வைத்த கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை எனது தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்து, அமருகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

கலைக் கல்லூரி

***4345—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, குத்தாலம் பேரூராட்சியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?